சுருக்கம்

பள்ளிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – (மறைந்த) திரு.கு.சின்னக்கண்ணு என்பாரின் மகள் திருமதி.சி.சாந்தலட்சுமி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – விதிகளைத் தளர்வு செய்து பணிவரன்முறை - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி[ப.க.3(1)]த் துறை

அரசாணை (ப) எண்.250

நாள் 23.09.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, புரட்டாசி 6

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.59792/ஜே1/2020, நாள் 06.01.2021
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.59792/ஜே/இ1/2020, நாள் 10.01.2022.

---

ஆணை:-

மேலே இரண்டாவதாக மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த திரு.கு.சின்னக்கண்ணு என்பார் பணியிலிருக்கும் போது 28.01.2008 அன்று பணியிடைக் காலமானார், அவரது மனைவி, தனது மகள் திருமதி.சி.சாந்தலட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 24.10.2008 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், மேலும், திருமதி.சி.சாந்தலட்சுமி என்பார் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 2005-இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவரின் பிறந்த தேதி

Scanned with OKEN Scanner

23.05.1990 ஆகும் என்றும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தின் வறிய நிலையையும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு, திருமதி.சி.சாந்தலட்சுமி என்பவருக்கு வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2971/அ1/2015, நாள் 28.07.2016-ல், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, அவர் 01.08.2016 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்து, அவரின் பணியினை கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற 01.08.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு முறையே பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி ஆணையர் கோரியுள்ளனர்.

2. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.சி.சாந்தலட்சுமி என்பவரது பணியினை, 01.08.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில், விதி 54-A (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 15) மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 23(a)(ii) (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)-ஐயும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 58-ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்வு செய்து, அன்னார் பணி நியமனத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், அவரது நியமன நாளான 01.08.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியருக்கு ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின், அவற்றை விதிகளின்படி பெற தகுதியுடைவராகிறார்.

Scanned with OKEN Scanner

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறை ஆகியவற்றின் அ.சா.எண். 1671/ட்டி1/2021, நாள் 04.02.2021 மற்றும் அ.சா.எண்.5612/ஜி1/2021-1, நாள் 03.03.2021-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
தனியர் (பள்ளிக் கல்வி ஆணையர் வழியாக)

நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/9/2022

பிரிவு அலுவலர்

23/9/22

Scanned with OKEN Scanner

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
முன்னிலை : திரு.க. முனுசாமி, M.Sc.,M.A.,B.Ed.,M.Phil.,MBA.,

நி.மு.எண்.3410/அ1/2020 நாள் 21.12.2022

பொருள் : கருணை அடிப்படைப் பணி நியமனம்–பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு. K.சின்னக்கண்ணி என்பவரின் வாரிசுதாரரான மகள் திருமதி. சி.சாந்தலட்சுமி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வழங்கியது – பணிவரன்முறை அரசாணை பெறப்பட்டது–சார்பு.

பார்வை :
1. வேலூர் மாவட்ட கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.நண்.2971/அ1/2015 நாள்.28.0702016
2. அரசாணை(ப)எண்.250பள்ளிக்கல்வி(ப.க.3(1))த்துறை நாள்.23.09.2022
3. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.59792/ஜே/இ1/2020 நாள். .11.2022

-----

பள்ளிக் கல்வித் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட கீழ்குறிப்பிட்ட பணியாளருக்கு பார்வை(2)–ல் காணும் அரசாணையின்படி கலம்(4)–ல் கண்ட நாள் பணிவரன்முறை முடித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இளநிலை உதவியாளர் பெயர்,பதவி (ம) பணிபுரியும் பள்ளி | பணிநியமனம் செய்யப்பட்ட நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 01 | திருமதி.சி.சாந்தலட்சுமி<br>இளநிலை உதவியாளர்<br>அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,<br>அணைகட்டு,<br>வேலூர் மாவட்டம். | 01.08.2016 மு.ப | 01.08.2016 மு.ப |

மேற்படி அரசாணையினை தனியாரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்தும், அதன் நகல் ஒன்றினை பணிப்பதிவேட்டில் ஒட்டி வைக்கவும், சார்ந்த தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது. மேற்காண் அரசாணை மற்றும் இணைப்பில் கண்ட மூல ஆவணங்கள், பணிப்பதிவேடு ஆகியவற்றை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் உடன் வழங்குமாறு தலைமை ஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு–
1. அரசாணை அசல்
2. இறப்புச் சான்றிதழ் அசல்
3. வாரிசுச் சன்றிதழ் அசல்
4. ஒருங்கிணைந்த சான்று அசல்
5. 10–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் வ.எண். 2566501 அசல்
6. கல்விச் சான்று உண்மைத் தன்மைச் சான்று
7. பணிப்பதிவேடு அசல்
8. சாதிச் சான்றிதழ் எண். 3618239 அசல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

20/12/2022

பெறுநர்
சார்ந்த பணியாளருக்கு (தலைமை ஆசிரியர் மூலமாக)
நகல்
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அணைக்கட்டு

Scanned with OKEN Scanner